யாழ்நகரில் தரமான A/L விஞ்ஞானக் கல்விக்கு என்றும் New Master Institute B.M.C. Lane, JAFFNA

Registered as a Newspaper

உதயன்

விலை ரூ.1/-

A/L 68 விஞ்ஞான வகுப்புக்கள் Iம், IIம் பிரிவுகள் நடைபெறுகின்றன IIIம் பிரிவு ஆரம்பமாகின்றது விபரங்கட்கு New Master Institute B.M.C, Lane, JAFFNA.

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

கடிதம் 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆடி மீ 09 உ திங்கட்கிழமை ஹிஜிரி [1406 ஷவ்வால் பிறை 14 (23-06 1986) UTHAYAN A DAILY TAMIL DAILY கதிர்:- 185

எட்டரைமணிநேரம்

வயாவிளானில் கடும் மோதல்

பல சிப்பாய்கள் பலி

நான்கு முனைத் தாக்குதலில் 4 இயக்கப் போராளிகள்

— பலாலிச் செய்தியாளர் : எஸ். கே. ராஜு —

பலாலி ஜூன் 23

வயாவிளான் மினிமுகாமில் இருந்தும், பலாலி முகாமில் இருந்தும் வெளியே வந்த இராணுவத்தினருக்கும், போராளிகளுக்கும் இடையில் நேற்றுக் கடும் மோதல்கள் இடம்பெற்றன.

சிப்பாய்களை எதிர்த்து நான்கு முனைகளிலும் இருந்து தமிழீழ விடுதலைப்புலிகள், தமிழ் ஈழ இராணுவம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் ஆகிய நான்கு இயக்கங்களைச் சேர்ந்த போராளிகள் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலில் பல சிப்பாய்கள் பலியானதாகவும், பலர் காயமடைந்ததாகவும் சொல்லப்படுகிறது.

போராளிகள்—சிப்பாய்கள் மோதல்கள் சுமார் எட்டரை மணிநேரம் நீடித்தன.

இந்தமோதல் குறித்து தெரிவிக்கப்படுவதாவது:

நேற்றுக் காலை 6மணிக்கு ஏக காலத்தில் வயாவிளான் முகாமில் இருந்து வடமூலை, திடற்புலம் ஊடாகவும் பலாலி முகாமில் இருந்து பலாலி வடக்கு வெளிச் சுடலை ஊடாகவும் சிப்பாய்கள் வெளியே வந்து முன்னேறினர்.

வெளியே வந்த சிப்பாய்களைநோக்கி தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் தமிழ் ஈழ இராணுவம், ச.பி.ஆர்.எல்.எவ். ஆகிய அமைப்புகளைச் சேர்ந்த போராளிகள் நான்கு முனைகளிலும் அடுத்தடுத்து இடைவிடாது தாக்குதல் நடத்தினர்.

சினிமா, ரொக்கட் லோஞ்சர், கிரனேட் ஆகியவற்றினாலும்—

துப்பாக்கிகளினாலும் தாக்குதல் நடத்தப்பட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

கந்தளாயில் ஊரடங்கு

திருகோணமலை,ஜூன்23

கந்தளாய்ப் பட்டினப் பிரதேசத்தில் நேற்றுப் பிற்பகல் அமுலாக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் இன்று காலை 6 மணியுடன் நீக்கப்பட்டது.

கந்தளாய்ப் பட்டினத்தில் நேற்று காலை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து, அங்கு பதற்றம் நிலவியது.

அதைத் தொடர்ந்தே ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வந்தது.

(உ-எ-2)

ம. ஐ. மு கலந்து கொள்ளாது

கொழும்பு ஜூன் 23

ஜூன் 25 இல் நடைபெறும் சர்வகட்சி மாநாட்டில் மக்கள் ஐக்கிய முன்னணி கலந்து கொள்ளாது.

மக்கள் ஐக்கிய முன்னணியின் செயற்குழு அண்மையில் கூடி, சர்வகட்சி மாநாட்டு அழைப்பை ஏற்றுக்கொள்வது இல்லை என்று முடிவு செய்தது.

மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரான திரு தினேஷ் குணவர்த்தன மகரகம எம்.பி. ஆவார்.

முச்சந்திமுரசு

மாநாட்டில் ஆர் கலந்து கொண்டால் என்ன கலந்து கொள்ளாவிட்டால் என்ன அரசியல் சாசனம் தான் நிறைவேறுதைச் செய்தே தீரும் என்றுஎப்பவோ சொல்லியாச்சே; அது சிவயோகர் சொன்ன மாதிரி எப்பவோ முடிஞ்சு விஷயம் தானே....!

தந்திரம்பலிக்கவில்லை

பலாலி, ஜூன் 23

நேற்று வயாவிளானில் வீரமரணமடைந்த புலிகள் இயக்க போராளியின் சடலத்தில் வெடிக்கத்தக்க நிலையில் கிரனேட் ஒன்று வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

சடலத்தை மீட்கச் செல்லுபவர்கள் அதில் சிக்கி மரணமடைய வேண்டும் என்ற தந்திர நோக்கத்தில் அது வைக்கப்பட்டதாம்.

ஆனால் தந்திரம் பலிக்கவில்லை!

இப்போராளியின் சடலம் சிப்பாய்களினால் இழுத்துச் செல்லப்பட்டு வயாவிளாவில் போடப்பட்டிருந்தது.

இறந்தவரின் கைகளுக்கிடையில் கிளிப்பினைப் பிடித்த நிலையில் கிரனேட் ஒன்று செருகப்பட்டிருந்தது.

எனினும் வீரமரணமடைந்த போராளியின் உடலை மீட்கச் சென்ற புலிகள் இயக்கத் தோழர்கள் கவனமாகப் பரிசோதித்து, வைக்கப்பட்டகுண்டு வெடிக்காதபடி அதனை முதலில் அப்புறப்படுத்தினர் என்று கூறப்படுகிறது. (உ-119)

சர்வகட்சி மாநாட்டில்

கூட்டணி பங்குபற்றாது

ஜே. ஆருக்குத் தந்தி

சென்னை, ஜூன் 23

கொழும்பில் ஜூன் 25இல் நடைபெறும் சர்வகட்சி மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணிகலந்துகொள்ளாது.

கலந்து கொள்ளும்படி இலங்கை அரசு விடுத்த அழைப்பை நிராகரிப்பது என்று கடந்த சனிக்கிழமை சென்னையில் கூடிய கூட்டணியின் அரசியல் குழுவில்முடிவு செய்யப்பட்டது

இந்த முடிவைஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு தந்தி மூலம் கூட்டணி அறிவித்து விட்டது.

சர்வகட்சி மாநாட்டில் கூட்டணி பங்குபற்றுவது இந்தியாவின் மத்தியஸ்த முயற்சிக்கு எதிராக அமையும் என்றும் கலந்து கொள்வதால் பயன்ஏதும் இராது என்றும் கூட்டணி அரசியல் செயற்குழு தெரிவித்தது.

சர்வகட்சி மாநாட்டுக்கான அழைப்பை கூட்டணி நிராகரிக்கும் முன்னர் சமும் தேசிய விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் ஆகியவற்றின் பிரதிநிதிகளையும் கூட்டணித் தலைவர்கள் சந்தித்தனர். (உ-எ)

அரச ஊழியர் அனுபவம்

யாழ்ப்பாணம்,ஜூன் 23

இளிநொச்சியில் பணிபுரியும் அரச ஊழியர்கள் சுமார்பத்துப்பேர் அது வலயங்களில் இருந்து திரும்பும்போது ஒரு மணித்தியாலம் வரை கரடிப்போக்குச் சந்தியில் உள்ள கந்தசாமி கோயில் வாசலில் சீருடையினரால் தடுத்து வைக்கப்பட்டனர்.

கடந்தவெள்ளிக்கிழமை நடந்த இச்சம்பவத்தைத் தொடர்ந்து, அரச ஊழியர்கள் அச்சம் காரணமாக இளிநொச்சிப் பகுதிக்கு வேலைக்குச் செல்லத் தயங்குகின்றனர்

இளிநொச்சியில் வங்கிக் கிளை ஒன்றின் அருகில் கட்டுக்கொல்லப்பட்ட பசுமாடு ஒன்றின் சடலமும் காணப்பட்டதாம் (உ-எ-9)

இலங்கைக்குகூலிப்படை;

பாக்., இஸ்ரவேல் விநியோகம்

சிவ்சங்கர் சாடுகிறார்

லண்டன், ஜூன் 22

கூலிப் படைகளையும் ஆயுதங்களையும் பாகிஸ்தானும் இஸ்ரவேலும் விநியோகித்து வருகின்றன

இதன் மூலம் இந்தியாவுக்கு நிர்ப்பந்தத்தையும் நெருக்டியையும் ஏற்படுத்துவதே இந்த வெளிச்சக்திகளின் நோக்கம்.

இப்படி இந்திய வெளியுறவு அமைச்சர் பி.சிவ்சங்கர் கலந்த ஞாயிறு லண்டனில் உள்ள இந்திய சமூகத்தினர் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு ஒன்றைக் காணுவதற்கான இந்தியாவின் நல்லெண்ண உதவி தொடர்ந்து இருக்கும்.

இலங்கையில் வன்செயல்கள் அதிகரிப்பதினால் வரும் அகதிகளைச் (4 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கரத்ன ராஜினாமா?

மக்கள் கட்சியில் பிளவு!

"விஜய"வின் போக்கு பிடிக்கவில்லை

கொழும்பு, ஜூன் 23

இலங்கை மக்கள் கட்சியில் இருந்து அதன் தலைவரான திரு ரி. பி இலங்கரத்தினா ராஜினாமாச் செய்து விட்டதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுகின்றது

கட்சி செயலாளரான திரு விஜய குமாரணதுங்காவின் போக்குப் பிடிக்காததினாலேயே திரு. இலங்கரத்தினா விலகி விட்டதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

தமிழ்நாடு சென்று போராளிகளைச் சந்திக்க மக்கள் கட்சியின் செயற்குழுவைக் கூட்டி முடிவெடுக்காமல் தானே முடிவு எடுத்தது—

நிதி சம்பந்தமாக ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு தமிழ்நாடு செல்ல அனுமதிபெற்றது—

ஆகிய காரணங்களுக்காக கட்சியின் உப தலைவர் சட்டத்தரணி வண்வின் குவரத்தினா ஏற்கனவே கட்சியில் இருந்து ராஜினாமாச் செய்துவிட்டார்.

ஆனால் தலைவரான திரு இலங்கரத்தினா கட்சி நடவடிக்கைகளில் இருந்து சில காலத்துக்கு ஒதுங்கியிருக்கப்போவதாகவே ஜூன் 18 இல் கட்சிச் செயற்குழுவுக்குக் கடிதம் மூலம் அறிவித்திருந்தார்

ஆனால் இப்பொழுது அவர் தலைவர் பதவியில் இருந்தே ராஜினாமாச் செய்து விட்டதாகத் தெரியவந்துள்ளது

(உ-எ-2)

தமிழகமதில் தமிழர் இடம்பெயர்வு

திருகோணமலை,ஜூன்23

தம்பலகமம் கிராமத்தில் இருந்து தமிழர்க்குடும்பங்கள் இடம்பெயர்ந்து வருகின்றன.

ஜூன் 16, 17 ஆம் திகதி தம்பலகமம் கிராமவாசிகளான 4 தமிழர்கள் ஊர்காவல் படையினரால் கட்டுக்கொல்லப்பட்டனர் அதைத் தொடர்ந்தே தமிழ் மக்கள் பாதுகாப்பான இடங்களைத் தேடிச் செல்கின்றனர். (உ-எ-2)

கந்தளாயில் வெடிகுண்டு

இருவர் பலி! 20 பேர் காயம்!!

திருகோணமலை,ஜூன்23

கந்தளாய் நகரில் நேற்றுக்காலை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் இருவர் உயிரிழந்தனர். காயமடைந்த 20 பேரில் 6 பேர் படுகாயங்களுக்காளாகினர்

மோட்டார் சைக்கிள் ஒன்றில் கட்டிவைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்றே வெடித்தது என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

கந்தளாய் நகரில் ஞாயிறு சந்தை கூடுவது வழக்கம்

அதன்படி நேற்றும் சந்தை கூடியது. சனக் கூட்டம் அதிகமாக இருந்த இடத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது

காலை 7.30 மணி அள

(4 ஆம் பக்கம் பார்க்க)

950 தொன் சீனியுடன் காங்கேசனில் கப்பல்

இறக்குவதில் இருந்த தாமதம் தவிர்ப்பு

காங்கேசன்துறை, ஜூன் 23

வடபகுதியில் விநியோகிப்பதற்காக 950 தொன் சீனி காங்கேசன் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறது.

"மேர்ச் மாத்தறை" என்ற கப்பல் சீனி மூடைகளுடன் கடந்த வெள்ளி இரவு காங்கேசன் துறை முகத்திற்கு வந்து சேர்ந்தது.

அரசாங்க அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கமும், உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்

23 — 6 — 1986

திங்கட்கிழமை

சுபநேரம்

11.54 முதல் 1.24 வரை

காலைகாலம்

7.24 முதல் 8.54 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

வயாவிளான் முகாமிலிருந்து ஏவப்பட்ட

ஷெல் குண்டுக்கு தந்தை, மகள் பலி!

யாழ்ப்பாணம், ஜூன்23

நேற்றுப் போராளிகளின் தாக்குதலையடுத்து வயாவிளான் முகாமுக்குத் திரும்பிச் சென்ற சிப்பாய்கள் அங்கிருந்து ஷெல் குண்டுகளை ஏவினர்.

இதனால் ஓர் இளம் பெண்ணும் அவரது தந்தையும் உயிரிழந்தனர்.

தொடர்ச்சியாக ஏவப்பட்ட ஷெல் குண்டுகள் புன்னாலைக்கட்டுவன், குப்பிளான் ஆகிய இடங்களில் விழுந்து வெடித்தன

ஹெலிக்கொப்டரிலிருந்தும் தாக்குதல் நடத்தப்பட்டது.

வடக்குப் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த ஆறுமுகம் கனகரத்தினம் (45 வயது), ஆறுமுகம் தயாநிதி (17 வயது) ஆகியோரே ஷெல் குண்டுகளினால் உயிரிழந்தனர்.

ஹெலிக்கொப்டர் துப்பாக்கிப் பிரயோகத்தின் போது காயமடைந்த சிலரி யாழ் வைத்தியசாலையிலும், தெல்லிப்பளை வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ - 10)

விசேட அறிவித்தல்

த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ் அண்மையில் ஏற்பட்ட அனர்த்தங்களால் 272 (358) நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு மாற்றப்பட்டது. தற்பொழுது எமது ஸ்தாபனம் 23-6-86 திங்கட்கிழமை தொடக்கம் 248, கே. கே. எஸ். வீதி, என்னும் முகவரியில் தொடர்ந்து இயங்கும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். வாடிக்கையாளர்கள் குறிப்பிட்ட முகவரியில் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

த குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்

248 கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி :- 23732

எயர் லங்காவுக்கு இந்தக் கதி!

கொழும்பு, ஜூன் 23

நேற்று மட்டும் எயர் லங்காவின் எட்டு விமான சேவைகள் ரத்துச் செய்யப்பட்டன

கராச்சி, திருவனந்தபுரம், திருச்சி, பம்பாய் ஆகிய இடங்களுக்கான இருவழி விமான சேவைகளே இப்படி ரத்துச் செய்யப்பட்டன

தொழில் நுட்பக் கோளாறுகள் காரணமாகவே இச் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டன என்று எயர் லங்கா வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை வெளிநாடுகளில் இருந்து எயர் லங்கா மூலம் வரும் பயணிகள் எண்ணிக்கையும் குறைந்து வருகின்றது

நேற்று சவூதி அரேபியாவில் இருந்து வந்த எயர் லங்கா விமானத்தில் 17 பயணிகள் மட்டுமே கட்டுநாயக்கா வந்து சேர்ந்தனர். (உ-எ-2)

சீர்திருத்தப் பள்ளி குண்டு வைத்து தகர்ப்பு

பலாலி, ஜூன் 23

பாதுகாப்புப் படை முகாமிடுவதற்கு திட்டமிட்டிருந்ததாகக் கூறப்படும் அச்சுவேலியில் உள்ள சிறுவர் சீர்திருத்தப் பள்ளி ஒன்று குண்டு வைத்து தகர்க்கப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் 12 மணிக்குப் 2.00 மணிக்கும் இடையில் போராளிகள் பல குண்டுகளை வைத்து பாடசாலையை முற்றுகத் தகர்த்தனர்.

இந்தக் கட்டடத்தைத் தகர்த்த குண்டின் சத்தத்தினால் அச்சுவேலி, பத்தமேனி, இடைக்காடு, ஆவரங்கால், குட்டியப்புலம், திடற்புலம் பகுதிகள் அதிர்ந்தன

(உ - 5 - 119)

கடுமை களைந்து மென்மை கலந்து

சிறிமாவுக்கு ஜே.ஆர். கடிதம்

கொழும்பு, ஜூன் 23

இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண உதவும்படி கோரி ஜனாதிபதி ஜெயவர்த்தனா தலிப்பட்ட கடிதம் ஒன்றை சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு எழுதியிருக்கிறார்.

ஜனாதிபதியின் அந்தக் கடிதத்தைக்குப் பின்னர்தான், ஜனாதிபதியைச் சந்திக்க தூதுக் குழு ஒன்றை அனுப்ப சுதந்திரக் கட்சித் தலைமைப்பீடம் முடிவு எடுத்ததாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பு,தெமட்டகொடப் பகுதியில் நடந்த யு. என். பி. கூட்டத்தில் ஜனாதிபதி ஜெயவர்த்தனா, சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி பண்டாரநாயக்காவைக் கடுமையாகத் தாக்கிப் பேசியிருந்தார்.

அப்படித் தாக்கிப் பேசிவிட்டு சர்வகட்சி மாநாட்டுக்கு வருமாறு சுதந்திரக் கட்சிக்கு அழைப்பு விடுத்தால், அவரைவரவும் உள்ள எவரும் ஏற்பரா?-- இப்படி சுதந்திரக் கட்சி விடுத்த அறிக்கை ஒன்றில் கேட்டிருந்தது.

சுதந்திரக் கட்சியின் இந்த அறிக்கையின் பின்னரே, ஜனாதிபதி ஜெயவர்த்தனா, திருமதி பண்டாரநாயக்க வுக்கு இந்தத் தனிப்பட்ட கடிதத்தை அனுப்பி இருக்கிறார்.

கடுமையான தெமட்டகொட தொனியைக் கைவிட்டு, மென்மையான தொனியில் ஜனாதிபதியின் கடிதம் அமைந்து இருப்பதாகத் தெரிகிறது (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்குப்பிட்டி - கேரதீவு

பிரயாணிகள் பெரும் அவதி

2 மாதமாக கடற்பாதை திருத்தப்படவில்லை

பூநகரி, ஜூன் 23

பூநகரியிலிருந்து யாழ்குடாநாட்டுக்கு தொடர்பை உண்டாக்கும் பூநகரி சங்குப்பிட்டி - கேரதீவு கடலில் சேவையில் ஈடுபட்டிருந்த கடற்பாதை இரண்டு மாதங்களாக பழுதாகி இருக்கின்றது. இதன் காரணமாக அவசர வைத்திய தேவை மற்றும் அத்தியாவசிய தேவை காரணமாக வாகனத்துடன் யாழ்ப்பாணம் போகவர முடியாமலுள்ளது

கிளிநொச்சியில் கடந்த சிலநாட்களாக ஏற்பட்டபதற்றநிலையிலும் இந்த மார்க்கமாகவே மக்கள் வன்னிநிலைகளில் போக்கு வரத்தை மேற்கொண்டு வருகின்றனர்

மேலும் ஆனையிறவு முகாம் ஊடாகப் போவதற்கு அச்சமடைபவர்களும் இதனூடாகவே செல்கின்றனர்- கடற்பாதை சேதம் அடைந்ததால் நான்கு சில்லு வாகனங்கள் செல்லமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது. (இ-124)

ஊர்காவல் படையால் மௌலவி கைது

மட்டக்களப்பு ஜூன் 23

மட்டக்களப்பு 2ஆவது எம்.பி. றிஸ்மி சின்ன லெவ்வை ஊர்காவல் படையினர் ஆகியோரை அவமதிக்கக்கூடியதாக நடந்து கொண்டதாகக் கூறப்படும் மௌலவி இஷாக் என்பவரை, காத்தான்குடி ஊர்காவல் படையினர் கைது செய்து பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்

பொலீஸார் சந்தேக நபரை மட்டக்களப்பு நீதிவான் எம். காரியப்பர் முன்னிலையில் ஆஜராக்கினர். சந்தேக நபர் 1,000 ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டார். (இ-எ-21)

என்னை நடிகனாக்கியது முகத்திலிருக்கும் தாடி மதுமோகன் சொல்கிறார்

'நம்பினார் கெடுவதில்லை' படத்தில் வில்லன் வேடம் ஏற்றிருப்பவர் மதுமோகன்.

திரையுலகிற்குப் புதியவரான சுபாவமும் களையான முகமும் கொண்டவர்.

இவருக்கு வில்லன் வேடம் பொருந்துமா என்பது பலரது கேள்வி!

தாடி மீசையை முகத்தில் ஒட்டி விட்டுப் பாருங்கள். அசல் வில்லனாகவே என்னைக் காண்பீர்கள் எனக் கூறுகிறார் மதுமோகன்.

டில்லியில் சுமார் நூறு நாடகங்களில் நடித்திருக்கும் மதுமோகனுக்கு சினிமா ஆசை தொற்றிக் கொண்டதில் வியப்பில்லை ஆனால் சந்தர்ப்பம் அனுகூலமாக அமையவில்லை. டில்லியில் இருந்தால் தமிழ்ப் படவுலகு வெகுதூரமாகி விடும் என உணர்ந்தார் மது. தான் பார்த்து வந்த வேலையை ராஜினாமாச் செய்து சென்னைக்கு வந்தார்.

ஆனால் உடனடியாக சினிமா கைகொடுக்குமா? அதுதான் இல்லையே!

உறவினரான டைரக்டர் கே சங்கரிடம் நடிக்கவிருக்கும் ஆர்வம் பற்றி விவரித்தார் மதுமோகன்.

அமைதியாகக் கேட்ட சங்கர் மதுவை நடிகனாக்குவதில் ஆர்வம் காட்டவில்லை. நாட்கள் பறந்தன

இசையமைப்பாளர் கணேஷிடம் சென்றேன். நடிக்க விருப்பம் எனக் கூறினேன் இசையமைப்பாளரான அவர் மீண்டும் டைரக்டர் கே சங்கரிடமே எதேச்சையாக என்னைப் பற்றிக் கூற அவரும் உடனடியாகவே சம்மதித்து விட்டார்.

கணேஷ் செய்தமாயம் என்ன என்று ஊகிப்பினேன் எனது தாடி என்று சங்கர் தெரிவித்தார் முதலில் தாடியில்லாமல் சாந்தமாக தோன்றியதாகவும் தாடியுடன் பார்க்கையில் ஒரு வில்லத்தனம் அமைவதாகவும் கே சங்கர் தெரிவித்தார்

'நம்பினார் கெடுவதில்லை' படத்தின் மூலம் வில்லனாக நடிகனாக ஆகினேன் என்கிறார் மதுமோகன்

திரை சினிமா

போதுமான அளவு சீனி கையிருப்பில்

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ் குடாநாட்டில் உள்ள சகல பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலும் போதுமான அளவு சீனி கையிருப்பில் உள்ளது

இப்படிச் சொன்னார் யாழ் மாவட்ட உதவி உணவுக் கட்டுப்பாட்டு திகாரி திரு. எஸ். பற்குணம்.

சகல கூட்டுறவுச்சங்கங்களுக்கும் கடந்த வியாழக்கிழமை நேரிற் சென்று பார்வையிட்டேன்.

அப்போது போதுமான அளவு சீனி சங்கங்களின் கையிருப்பில் இருப்பது தெரிந்தது.

எனவே குடாநாட்டில் சீனித் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு நியாயமில்லை

பொதுமக்கள் கூட்டுறவுச்சங்கக்கடை நடிச் செல்வது குறைவு. தனியார் கடைகளையே அதிகம் நாடுவதால்தான் சீனிக்குத் தட்டுப்பாடு என்ற அபிப்பிராயம் ஏற்பட்டுள்ளது.

இப்படி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு பற்குணம் தெரிவித்தார். (உ-எ)

இலங்கை இனப்பிரச்சினை

இராணுவத் தீர்வுக்கு பிரிட்டிஷ் எம்.பி. எதிர்ப்பு

சென்னை, ஜூன் 22

இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண எடுக்கப்படும் முயற்சிகளை பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தலைவர் திரு. நீல் கின்னொக் வன்மையாக எதிர்த்துள்ளார்.

'இந்து' நாளிதழுக்கு அளித்த பிரத்தியேக பேட்டியில், இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவ தீர்வு காண முடியாது- என்று அவர் சொன்னார்.

அமைதித் தீர்வு ஒன்றைக்காண இந்தியா எடுத்து வரும் முயற்சிகளையும் திரு கின்னொக் பாராட்டினார்

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியா எடுத்து வரும் ஒவ்வொரு நடவடிக்கையும் பாராட்டுதற்குரியது.

அந்தப் பாதையில் ஏதாவது கஷ்டங்கள் இருந்தால் அதற்கு இந்தியா பொறுப்பாக இருக்க முடியாது இது என் அபிப்பிராயம்

இப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணுவது என்பது ஆபத்தானது. பெரும் முடக்கட்டையைத்தான் இது ஏற்படுத்தும்.

ஆகையால் இராணுவத் தீர்வு காணப்படும் என்ற எண்ணத்துக்கே இடமில்லை.

இப்படி தொழிற் கட்சித் தலைவர் திரு. கின்னொக் தெரிவித்தார். (உ-எ-2)

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

மட்டக்களப்பு பல்கலைக்கழக

முஸ்லிம் மாணவர் நிலைபற்றி மஜ்லிஸ் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 23

மட்டக்களப்பு பல்கலைக்கழக முஸ்லிம்மாணவர் பற்றி மட்டக்களப்பு பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் விடுத்த அறிக்கை வருமாறு:—

மட்டக்களப்புபல்கலைக் கழகத்தில் கல்வியிலும் முஸ்லிம் மாணவர்களின் நிலை பற்றி பரப்பி வரப்படும் சில செய்திகள்— இங்கு பயின்று கொண்டிருக்கும் முஸ்லிம் மாணவர்கள் பற்றிய விரும்பத்தகாத சந்தேகங்களை மக்கள் மத்தியில் தோற்றுவிக்கக்கூடியன.

இங்கு கல்வி பயிலும் முஸ்லிம் மாணவர்கள் -ஏனைய மாணவர்களுக்கு இல்லாத விசேஷ கஷ்டங்கள் எதையும் இது வரை அனுபவிக்கும் நிலை ஏற்பட்டதில்லை.

முஸ்லிம் மாணவர்களின் வேண்டுகோளை ஏற்று அரசாங்கத்திலிருந்தே இங்கு தொழுகை நடத்துவதற்கென ஒரு பிரத்தியேக இடவசதி தரப்பட்டுள்ளது.

வருடா வருடம் நோன்பு நோற்பதற்கான வசதிகளை மேற்கொள்ள அனுமதி தரப்பட்டிருக்கின்றது விரும்பிய நேரங்களில் மஜ்லிஸ் கூடுவதற்கும் ஆலோசிப்பதற்கும் இடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

திறமை அடிப்படையில் கடந்த 1984 ஆம் ஆண்டில் மூன்று முஸ்லிம் மாணவர்களும், 1985 ஆம் ஆண்டில் ஒரு முஸ்லிம் மாணவனும் 'செய்முறைப் போதிப்பாளர்' களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் அண்மையில் முடிவுற்ற விஞ்ஞான பொதுப்பட்டதாரிப் பரீட்சையிலும் மூன்று முஸ்லிம் மாணவர்கள் 'இரண்டாம் உயர் சிறப்புத் தரத்தில் சித்தியடைந்திருக்கின்றனர்.

இது தவிர, மாணவர் மன்றங்களும், விசேஷ தூதுக்குழுக்களிலும் முஸ்லிம் மாணவர்கள் போதியளவு அங்கம் வகிக்கிறார்கள். மேலும் ஏனைய மாணவர்களைப் போலவே. - முஸ்லிம் மாணவர்கள் தங்கள் நலன்களைப் பேணும் முகமாக பீடத்தலைவர்களையும், அதிகாரிகளையும் சந்தித்துக் கொள்வதில் எந்தத் தடங்கல்களும் ஏற்பட்டதில்லை.

அரசாங்கத்தாலும், சில பொதுக்குழுக்களாலும் தீர்த்து வைக்கப்படவேண்டிய ஒரு சில பொதுப் பிரச்சினைகளைத் தவிர, சிறப்பான கஷ்டங்கள் எதையும் இம் முஸ்லிம் மாணவர்கள் அனுபவிக்கவில்லை.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-வ)

கத்தோலிக்க மாணவர் ஒன்றியக் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

அருள்சகோதரர் வென் செஸ்லோஸ் இராணுவத் தினரால் கடந்த வெள்ளிக்கிழமை கொடூரமான முறையில் கொல்லப்பட்டதை யாழ் பல்கலைக் கழகக் கத்தோலிக்க மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது

ஒன்றியம் விடுத்த அறிக்கை ஒன்றில் இக் கண்டனம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அண்மைக் காலத்தில் கொலையுண்ட மக்களின் ஆன்ம ஈடேற்றத்துக்காக 26 06 1986 மாலை 5 மணிக்கு சந்தியோகையர் தேவாலயத்தில் சிறப்பு வழிபாடு ஒன்றை யாழ் பல்கலைக் கழகக் கத்தோலிக்க மாணவர் ஒன்றியம் ஒழுங்கு செய்துள்ளது (எ)

கைதானோர் சடலங்கள் சூட்டுக் காயங்களுடன் கண்டுபிடிக்கப்பட்டன

மட்டக்களப்பு, ஜூன். 23

கடந்த புதன்கிழமை இரவு சீருடை தரித்தவர்களினால் கைது செய்யப்பட்ட மாமாங்கம் பகுதியைச் சேர்ந்த இரண்டு தமிழ் இளைஞர்களின் சடலங்கள் வியாழக்கிழமை துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கண்டுபிடிக்கப்பட்டன.

22வயதான செ.மகேந்திராராசா (சீவல் தொழிலாளி) யின் சடலம் இருதயபுர வீதியில் கிடந்தது

19வயது நிரம்பிய ந. தனஞ்ஜெயராசிங்கத்தின் சடலம் ரயில் பாதை ஓரப்பகுதியில் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

கொக்குவில் காளி கோவில் திருவிழாவுக்குச் செல்வதற்காக வீட்டு வாசலில் நின்றுகொண்டு இருந்தசமயம் சீருடையார் இரண்டுபேரையும் பிடித்துச் சென்றார்கள்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி த. சிவநாதன் மரணவிசாரணை நடத்தினார். (இ-எ-21)

சர்வகட்சி மாநாடுக்கு முன்னதாகவே

சுதந்திரக் கட்சியிடம் யோசனை சமர்ப்பிக்கப்படுமா?

யாழ்ப்பாணம், ஜூன் 23

சர்வகட்சி மாநாடுக்கு முன்னரே சுதந்திரக் கட்சியிடம் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான யோசனைகளை அரசாங்கம் கையளிக்குமா?

ஜூன் 25க்கு முன்னர் சுதந்திரக் கட்சியின் தூதுக்குழு ஒன்றை ஜனாதிபதி சந்திக்க சம்மதித்தால், அச்சந்திப்பின் போது அரசு தனது புதிய யோசனைகளைக் கையளிக்கலாம் என்று சுதந்திரக் கட்சித் தலைமைபீடம் எதிர்பார்க்கிறது.

சர்வகட்சி மாநாடு தொடர்பாக சுதந்திரக் கட்சி அறிக்கை ஒன்றை கடந்த வியாழன் வெளியிட்டது-

அந்த அறிக்கையிலேயே இந்த எதிர்பார்ப்பை சுதந்திரக்கட்சி தெரிவித்துள்ளது. சர்வகட்சி மாநாட்டுக்கு முன்னர் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச சுதந்திரக்கட்சி தீர்மானித்து ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தது.

அக் கடிதத்துக்கு ஜனாதிபதியிடம் இருந்து இன்னும் பதில் கிடைக்கவில்லை என்று கட்சிச் செயலாளர் திரு. தஸநாயக்கா சொன்னார். (இ-எ)

அத்துலத் அமெரிக்காவுக்கு

கொழும்பு, ஜூன் 23

தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி சனிக்கிழமை இரவு அமெரிக்கா பயணமானார்.

அங்குள்ள இலங்கையர் சமூகங்களில் உரை நிகழ்த்துவதற்காகவே அமைச்சர் அமெரிக்கா செல்வதாக கொழும்பில் தெரிவிக்கப்பட்டது; (அ-எ-3)

211 ரயில்வே அதிகாரிகளுக்கு இராணுவ பயிற்சி

கொழும்பு, ஜூன் 23

இராணுவப் பயிற்சி பெறுவதற்காக 211 பாதுகாப்பு அதிகாரிகளை ரயில்வேத் திணைக்களம் பன்னல இராணுவத் தொண்டர் முகாமுக்கு அனுப்பி வைத்துள்ளது

ஒரு மாத இராணுவப் பயிற்சி இவர்களுக்கு அளிக்கப்படும்.

ரயில்வேத் திணைக்களத்தில் 592 பாதுகாப்புஊழியர் உள்ளனர். (இ-எ)

அஜந்தா வெற்றி

நீர்வேலி, ஜூன் 23

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி சமீபத்தில் இடம்பெற்றபோது அஜந்தா இல்லம் முதலிடத்தையும், சிகிரியா, கைலாஸ் இல்லங்கள் அடுத்த இடங்களையும் பெற்றுக்கொண்டன. -(இ-110)

கல்வி

பாதுகாப்பான சூழலில் மாணிப்பாயில் கம்யூட்டர் பயிற்சி (Computer Programming) வகுப்புக்கள் மிகவும் குறைந்த சலுகைக் கட்டணத்தில். ஆரம்பம் 27-6-1986 O/L படித்த அனைவரும் சேரலாம். தமிழ்மொழி பெயர்ப்பு வழங்கப்படும். நேரில் வரவும். Unikco Computer Centre, சுதுமலை சந்தி, 283, யாழ்ப்பாண ரோட், மாணிப்பாய்.

பலாலி விமானத்தள விஸ்தரிப்புக்கான காணி சுவீகரிப்பு

அறிவித்தல்

மேற்கண்ட கவிகரிப்பு எல்லைக்குள் தத்தமது நிரந்தர அல்லது தற்காலிக வீடுகளை விட்டு வெளியேறியோர் 1986-06-26ஆந் திகதி வியாழக்கிழமை காலை 9 00 மணிக்கு தெல்லிப்பளை உதவி அரச அதிபர் பணிமனையில் தவறாது சமுகமாயிருக்குமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

இத் திகதியில் விலைமதிப்புத் திணைக்களத்தாரின் நஷ்ட ஈட்டுக் கணிப்பு சம்பந்தமான ஆரம்ப வேலைகள் இடம் பெறும்

வை.மு. பஞ்சலிங்கம்
யாழ். மாவட்ட செயலாளரும்,
அரச அதிபரும்,
யாழ் மாவட்டம்.

கச்சேரி,
யாழ்ப்பாணம்.
19-06-1986.

பிரயாண ஒழுங்குகள்

★ கனடா
★ ஜேர்மன்
★ பிரான்ஸ

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

மற்றும்

பாஸ்போர்ட், விசா, பொண்ட் (Bond) ரிக்கட் ஆகியனவும்

செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ளவும்:

INTERSUN GROUP

சின்னத்தம்பி அவெனியு.
(மகாவீர் கல்லூரிக்கருகாமையில்)

மானிப்பாய்.

குறிப்பு:

பிரான்ஸ், ஜேர்மன், கனடா ஆகிய நாடுகளுக்கு முற்பணம் தந்தவர்கள் 25-06-86க்கு முன் தொடர்பு கொள்ளவும்.

நகைக் கடை உரிமையாளர் கொலை

ஒருவர் கைது செய்யப்பட்டார்

திருகோணமலை ஜூன்23

திருகோணமலையில் கடந்த வியாழன் ஊர்காவல் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் நகைக்கடை உரிமையாளரான சுப்பிரமணியம் ஞானவேலின் மரணம் சம்பந்தமாக ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இம்மரணம் சம்பந்தமான மரண விசாரணை ஜூன் 24 இல் நடைபெறும்

இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:

திருகோணமலை ஏகாம்பரம் வீதியில் உள்ள அஜந்தா நகைமாளிகையின் உரிமையாளர் திரு ஞானவேல். வயது 40.

இவரது இல்லம் பாலையூற்றுப் பகுதியில் உள்ளது.

கடந்த வியாழன் மாலை இவர் தனது குடும்பத்தினருடன் வீட்டில் இருந்தார்.

ஊர்காவல் படையினர் என்று கூறப்படும் சிலர் இவரின் வீட்டுக் கதவைத் தட்டினராம்.

கதவைத் திறந்து கொண்டு திரு. ஞானவேல் வெளியே வந்த போது இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

இதில் ஞானவேல் அந்த இடத்திலேயே மரணமானார். மனைவிக்கும் சூட்டுக்காயம் ஏற்பட்டது.

ஞானவேலின் சடலம், திருகோணமலை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டுப் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

சனிக்கிழமை காலை இறுதிக்கிரியைகள் இடம் பெற்றன.

மரண விசாரணை எதிர்வரும் செப்டம்பர் மாதம் [illegible] நடைபெறவுள்ளது (இ-எ)

சகோதரனைத் தேடி முகாம் சென்ற பெண்ணுக்கு ஏற்பட்ட அனுபவம்

யாழ்ப்பாணம், ஜூன்23

காணாமற் போனதாகக் கூறப்படும் சகோதரனைத் தேடி முகாமுக்குச் சென்ற சகோதரி தப்பினேன், பிழைத்தேன் என்று திரும்பி ஓடி வந்து விட்டார்.

அந்தச் சகோதரியின் அனுபவம் பற்றிச் சொல்லப்படுவதாவது:—

சகோதரி முதலில் ஒரு முகாமுக்குச் சென்றாராம். அங்கு அவரின் சகோதரன் இல்லை என்று கூறப்பட்டது.

பின்னர் அரசாங்க அதிபரின் உதவியுடன் முந்திய முகாமுக்கு அடுத்துள்ள மினி முகாமுக்கு கடந்த புதன்கிழமை சென்றாராம்.

குறிப்பிட்ட தூரத்தில் இருந்து நடந்து வரும்படி அந்தப் பெண்ணுக்குபணிக்கப்பட்டது

அருகே வந்ததும் 'நில்' என்று அவருக்குக் கூறப்பட்டது.

பின்னர் 'கையைத் தூக்கு' என்று சொல்லப்பட்டது.

அதன் பின்னர் "அப்படியே திரும்பி ஓடு"— என்று அப்பெண்ணுக்கு உதிதரவிடப்பட்டது.

அவ்வளவு தான் பயத்தினால் அப்பெண் வீட்டுக்குத் திரும்பி விட்டார். (எ-5)

சுடப்பட்டு சடலம் எரிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 23

மட்டக்களப்பு, ஊறணிப்பகுதியில் கடந்த புதன்கிழமை பிற்பகலில் நடந்த தேடுதலின் போது இடம்பெற்றதுப்பாக்கிப் பிரயோகத்தில் லோறன்ஸ் பெனடிற் என்ற (21 வயது) இளைஞர் கொல்லப்பட்டார்.

இவரின் சடலம் படையினரால் எரிக்கப்பட்டது (இ-எ-21)

31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
மருதப்பு பொன்னுத்துரை

அன்னை மடியில்: 10-08-1919
அரன் அடியில்: 24-05-1986

எங்கள் இல்லற ஜோதியாம் அன்பும், பண்பும், பாசமும் ஒருங்கிணைய எம்மை வளர்த்து வாழவைத்த அன்புத் தெய்வமே! உங்கள் நினைவு எங்கள் இதயத்தில் என்றும் ஒளிவீசிக்கொண்டிருக்கிறது தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்,
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரங்கள்,
உறவினர்கள்.

6ஆம் யூனிற் பிள்ளையார் வீதி,
இராமநாதபுரம்,
கிளிநொச்சி

digitized by noolaham foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

துன்பம் மறந்திடு
தூற்றுதல் ஒழி.
—மகாகவி பாரதியார்

உதயன்
உண்மை – விடுதலை – நடு நிலைமை
இல. 15 2வது ஒழுங்கை
பிரைசர் நிலைய வீதி,
யாழ்ப்பாணம், 23 06-86
தொலைபேசி 24805
22073
த. பெ. 23

சுயதேவை, சுதேசியம்: பொருளியல் சுதந்திரம்

தமிழ்ப் பகுதிகளின் விவசாயப் போக்கு மாற்றப்பட வேண்டும். இவ்வாறு ஆய்வு நிறுவனத்தினர் யாழ் பல்கலைக்கழகத்தில் நடத்திய விவசாயக் கருத்தரங்கில் பலரும் வலியுறுத்தினார்கள்.

கொழும்புச் சந்தையில் இப்போது அளவுக்கு அதிகமாக நாட்டம் கொள்ளப்படுகிறது. அதிக லாபம் தேடிப் பணம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் அங்கு நல்ல விலை போகக் கூடிய பயிர்வகைகளையே பெருமளவில் செய்யும் போக்கு இப்போது நிலவுகிறது.

ஆனால் காலத்தின் தேவை இப்போது மாறி வருகிறது. தமிழ்ப் பகுதி மக்களின் உணவுச் சுயதேவையை தமிழ்ப் பகுதி விவசாயிகளே நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலை உருவாகி வருகிறது. ஆகையால் காலத்தோடு ஒட்டி சுயதேவைப் பூர்த்திக்கு முதன்மை இடம் வழங்கப்பட வேண்டும். அதற்கு ஏற்றாற்போல் எமது விவசாயப்போக்கு மாற்றி அமைக்கப்படுவது அவசியம்.

கருத்தரங்கில் முன்வைக்கப்பட்ட முக்கியமான கருத்து இதுவாகும்

இதனை நாம் வரவேற்கிறோம். இதற்குச் செயலுருவம் கொடுக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் விரும்புகிறோம்.

கொழும்புக்கும் தமிழ்ப் பகுதிகளுக்கும் இடையில் வாகனப் போக்குவரத்து இப்போது நரக வேதனை. இந்தக் கஷ்டநிலை மேலும் தொடரும் என்று எதிர்பார்க்கலாமே அன்றிக் குறையும் என்று நினைக்க இயலாது.

ஆகையால், சுயதேவைப் பூர்த்திக்கு ஏற்ற விவசாயப் போக்குத் தானாகவே நடைமுறைக்கு வரும் என்று கொண்டாலும் தவறல்லவே.

எதற்கும் கொழும்பில் விலைபோகக்கூடிய காசுப் பயிர்களை அதிகளவில் உற்பத்தி செய்யும் போக்கு நிறுத்தப்பட வேண்டும். எமது பகுதி மக்களின் உணவுச் சுயதேவையைப் பூர்த்தி செய்யும் இலக்கை நோக்கி இப்போதிருந்தே செயற்படுவது அவசியம்

கொழும்பில் இருந்து உணவுப் பொருள்கள் எமக்குத் தொடர்ந்து கிடைக்கும் என்பது என்ன நிச்சயம்?

இக்கட்டத்திலாவது எமது மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதாகு நடவடிக்கை எடுக்கத் தவறுவோமாயின், மக்கள் பசி, பட்டினியை எதிர்நோக்க வேண்டிய துரதிஷ்டம் ஏற்படும்

அதனைத் தவிர்க்க—

எமது வளங்களை உரிய முறையில் கண்டறிதல் அவசியம் அதன் பின்னர் அந்த வளங்களை எமது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய விதத்தில் பயன்படுத்த வேண்டும். அதற்குப் பின்னரே ஏற்றுமதி குறித்துக் கவனம் செலுத்த வேண்டும்.

காசுப் பயிர்களான மிளகாய், வெங்காயம், புகையிலை, உருளைக் கிழங்கு ஆகியவற்றில் செலுத்தும் கவனத்தைக் குறைக்க வேண்டும். மரவள்ளி, சுரக்கன், வரகு, எள்ளு போன்ற சிறு தானியங்களைப் பயிர் செய்வதில் அதிக கவனஞ் செலுத்த வேண்டும் மாற்று உணவாக பயன்படக்கூடிய பயிரினங்களை அதிகம் வளர்க்க வேண்டும்.

அதே போன்று எல்லாப் பகுதிகளிலும் ஒரே பயிர்வகையையே செய்கை பண்ணும் பழக்கத்தையும் நிறுத்த வேண்டும். அந்தந்தப் பகுதி மண் வளத்துக்கு ஏற்ற, அதிக விளைச்சல் தரக்கூடிய பயிர்களை அறிந்து பயிரிட வேண்டும். அப்போது தான் பலவிதமான உணவுப் பொருள்களும் எமது பகுதியில் கிடைக்க வாய்ப்பு உண்டாகும்.

சுதந்திரமும், சுதேசியமும் ஒன்றுடன் மற்றது பின்னிப் பிணைந்தது. அதனால் தான் காந்தி அடிகள் சுதந்திரத்துக்கு முன்னரே சுதேசியத்தை வலியுறுத்தினார்.

சுதேசியம், சுயதேவைப் பூர்த்தி என்பன விவசாயத்துறைக்கு மட்டும் அல்ல, கைத்தொழில், சந்தைப்படுத்தல், வர்த்தகம் ஆகிய துறைகளுக்கும் அவை பரவவேண்டும்.

வர்த்தகர்கள் ஒரு சிலர் தாம் கொள்ளை லாபம் அடித்துப் பணம் சேர்ப்பதற்காக இங்கு உற்பத்தியாகும் பொருள்களையும் தொடர்ந்து கொழும்பிலிருந்து தருவிக்கிறார்கள் இது எமது பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் தடைக்கல். அந்தத் தடைக்கல் உடனடியாக அகற்றப்படவேண்டும்.

கைத்தொழில் துறையிலும்—

எல்லோரும் ஒரே பொருளை உற்பத்தி செய்வதில் பணத்தை முதலிடும் ஆரோக்கியமற்ற தன்மை அகல வேண்டும். ஒருவர் ஓர் உற்பத்தியில் ஈடுபட்டு லாபம் தேடுகிறார் என்பதைக் கண்டதும், அதே பொருளைத் தானும் உற்பத்தி செய்து லாபம் ஈட்டலாம் என்று நினைக்கக் கூடாது. அது கைத்தொழில் வளர்ச்சியைக் கெடுத்துவிடும்.

மக்களின் கொள்வனவுத் தன்மை, சந்தை வசதி என்பனவற்றைக் கருத்தில் கொண்டு புதுத் தொழில் துறைகளில் ஈடுபட வேண்டும்.

அப்போது தான் கைத்தொழில்துறை வளரும். பலருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும். பொருளாதாரமும் வளரும்.

எல்லாவற்றுக்கும் மேலாக உள்ளூர் விவசாய, கைத்தொழில் உற்பத்திகளை ஆதரிக்க வேண்டும் என்ற சுதேசிய எண்ணம் மக்கள் மனதில் ஏற்படுவது அத்தியாவசியம்.

ஆகக்குறைந்தது உள்ளூரில் உற்பத்தியாகும் பொருள்களைப் பொறுத்தளவிலாவது வெளியிடத்துப் பொருளை வாங்கக் கூடாது என்ற எண்ணம் உருவாக வேண்டும்.

அப்போதுதான் சுயதேவை, சுதேசியம் எல்லாம் சாத்தியமாகும். பொருளாதார சுதந்திரமும் இலகுவாகும்.

இந்திய பிராந்தியத்தில் குழப்பநிலைமை

இலங்கை, பஞ்சாபில் அந்நியசக்திதூண்டுதல்

புதுடில்லி, ஜூன் 22

இந்திய பிராந்தியத்தில் குழப்பநிலையை ஏற்படுத்துவதில் அந்நிய சக்திகள் ஈடுபட்டிருக்கின்றன. இலங்கை, பஞ்சாப் நிகழ்வுகளில் இதனைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு பி சிவ் சங்கர் இப்படி லண்டனில் வைத்துத் தெரிவித்தார்

லண்டனில் உள்ள இந்தியத் தூதரகத்தில் இந்திய அகதிகள் மத்தியில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தியாவின் கூட்டுச் சேரா கொள்கை, சுய நம்பிக்கை, பொருளாதார சுதந்திரம் ஆகியவற்றை விரும்பாத சில அந்நிய சக்திகளே இக் குழப்ப நிலையை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றன.

இதனை நிரூபிப்பதற்கு ஆவணரீதியான சான்றுகள்கூட எம்மிடம் இருக்கின்றன

பஞ்சாப் நிகழ்வுகளுக்கு எமது அயலவர்களினதும்; அந்நிய சக்திகளினதும் தூண்டுதலே காரணம்– இப்படி திரு சிவ் சங்கர் மேலும் தெரிவித்தார். (உ)

போட்டியின்றி தெரிவு

புதுடில்லி, ஜூன் 22

இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் இந்திய ராஜ்ய சபைக்கான தேர்தல்களில் பாரதிய ஜனதாக் கட்சியைச்சேர்ந்த அடல் பிஹாரி வாஜ்பேயும் எட்டு இந்திரா காங்கிரஸ் வேட்பாளர்களும் போட்டியின்றித் தெரிவாகியுள்ளனர்

தமிழ் நாட்டிலிருந்து சட்ட மேலவைத் தேர்தல்களுக்கான ஆறுஇடங்களுக்கு எட்டுப் பேர் போட்டியிடுகின்றனர்.

இந்தியாவின் பல மாநிலங்களின் சட்ட மேலவைகளில் இந்தத் தேர்தல்கள் நடக்கும், (உ-ஒ

நாய் செய்த வேலை எஜமானுக்குதொல்லை

லண்டன், ஜூன் 22

லண்டனில் பொது நடைபாதையில் ஒரு நாய் மலம் கழித்து விட்டது. பொலீஸார் அந்த நாயின் எஜமானரைக் கைது செய்து வழக்குப் போட்டனர்.

எஜமானர் தன் காப்பாளர் நாயைத் தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கவனிக்கத் தவறி விட்டார் என்று அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது

வழக்கு முடிவில் அவருக்கு ஐம்பது ஸ்டேர்லிங் பவுண் அபராதம் கட்டும்படி தீர்ப்பு வழங்கப்பட்டது

அந்த இடத்தை சுத்தம் செய்து கொடுப்பதும் அவர் வேலை என்று தீர்ப்பிற் குறிப்பிடப்பட்டது

இதனால் அந்த எஜமான் அபராதம் கட்டியதோடு அந்த இடத்தையும் சுத்தம் செய்தார் (உ-ஒ 5)

ஸ்பெயின் தேர்தலில் சோசலிஸ்ட் கட்சிக்கு வெற்றிகிட்டுவது உறுதி

மாட்ரிட், ஜூன், 22

இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஸ்பெயின் நாட்டுப் பொதுத் தேர்தலில் கடும் போட்டிக்கு மத்தியில் ஆளும் சோசலிஸ்ட் கட்சி எப்படியும் வெற்றி பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உத்தேச வாக்குக் கணிப்புகளின்படி 1982 ஆம் ஆண்டுத் தேர்தலில் கிடைத்தது போல ஆளும் கட்சிக்கு இம் முறை அறுதிப் பெரும்பான்மை கிடைக்காமல் போகலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது ஆனாலும் ஆளும்கட்சி வெற்றி பெறுவது உறுதி என அந்த மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

வலதுசாரி கூட்டுக் கட்சிகளின் எதிர்ப்பே ஆளும் சோசலிஸ்ட் கட்சிக்கு பெரும் சவாலாக அமைந்திருக்கிறது. (உ-ஒ)

கார்ட்டர் ஆதரவு

நியூயோர்க் ஜூன் 22

தென் ஆபிரிக்காவிற்கு எதிராக பொருளாதாரத் தடைகள் விதிப்பதைத் தாம் முழு அளவில் ஆதரிப்பதாக முன்னாள் அமெரிக்க அதிபர் திரு ஜிம்மி கார்ட்டர் தெரிவித்துள்ளார்

இத்தகைய நடவடிக்கைகளை எதிர்க்கும் அதிபர் றேகனையும்பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரட் தாட்சரையும் அவர் வன்மையாகக் கண்டித்துள்ளார். (உ-ஒ)

அமைச்சரை கொல்ல துணிகர முயற்சி

கொலம்பியாவில் நடந்தது

பகோடா, ஜூன்22

கொலம்பியா உள் நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு ஹனி ஹஸ்டனை கொல்வதற்கு எடுத்த முயற்சி தோல்வி கண்டது. இவர் மயிரிழையில் உயிர் தப்பினார்.

இடது சாரி இயக்கமான 'எம் 19' என அழைக்கப்படும் கெரிலாக் கூட்டத்தினரே இக்கொலை முயற்சியை மேற்கொண்டனர்.

அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகச்சென்ற ஹனி ஹஸ்டனின் காரை, பாரம் தூக்கும் இயந்திரம் ஒன்றால் நசுக்க இவர்கள் முயற்சி எடுத்தனர்.

ஆனால் அவர்களது இலக்குத்தவறி அமைச்சரின் பாதுகாவலுக்குச் சென்ற பொலீஸ் காரை பாரம் தூக்கும் இயந்திரம் மோதி நாசப்படுத்தியது.

பொலீஸார் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்ட 'எம் 19' இயக்கத்தினர் மீது பொலீஸார் திருப்பிச் சுட்டதில் பலர் காயமடைந்தனர். (இ-ஒ)

உச்சி மாநாடு ஆகஸ்ட் முற்பகுதியில்

ஹறாரே ஜூன், 22

கூட்டுச் சேரா இயக்கத்தின் எட்டாவது உச்சி மாநாடு சிம்பாப்வே தலைநகரான ஹறாரேயில் ஆகஸ்ட் முற்பகுதியில் நடைபெறும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை, தென்ஆபிரிக்க நெருக்கடி, அணு ஆயுதத்தடை ஆகியவை பற்றியும் உச்சி மாநாடு விவாதிக்கும். (இ-ஒ)

பங்களாதேஷில் மலேரியாவுக்கு 130 பேர் பலி

டாக்கா, ஜூன் 22

பங்களாதேஷில் வேகமாகப் பரவிவரும் மலேரியாவால் சுமார் 130 பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

டாக்காவின் வடகிழக்கு பகுதியில் மட்டும் சுமார் 2,000 பேர் வரை இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். (இ—ஒ)

தமிழ்நாட்டில் எரிப்புப் போராட்டம்

சென்னை, ஜூன் 22

இந்தியமத்திய அரசின் மத்திய கல்வித்திட்டத்தின் ஆணையின் நகல்களை திராவிடர் கழகத் தொண்டர்கள் நேற்று (சனி தமிழ்நாட்டின் பல பகுதிகளில் எரித்தனர்.

சென்னைநகரில் அண்ணா சாலையில் வைத்து திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி கல்வித்திட்ட ஆணையை எரிக்க முயற்சிக்கையில் பொலீஸார் அவரைக் கைது செய்தனர். (உ-ஒ)

புராதன பைபிள் வாசகம் கண்டுபிடிப்பு

டெல்அவிவ், ஜூன் 22

ஜெருசலம் நகரில் சுமார் 2,600 வருடங்களுக்கு முந்தியதாகக் கணிக்கப்படும் 'பைபிள் வாசகங்கள்' ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இரண்டு சிறிய வெள்ளி பேழைகளினுள் வைக்கப்பட்டிருந்த வெள்ளிச் சுவடிகளில் 'ஹிபுரு' எழுத்துக்களில் உள்ள இவை பைபிள் வாசகங்களில் மிகவும் புராதனமானவை எனக் கூறப்பட்டுள்ளது (உ-ஒ)

வெளி உலகில்

கங்காருகளை காக்க ஆஸி அரசு முடிவு

பல்லாயிரக் கணக்கான கங்காருகளின் உயிர்களைப் பாதுகாக்க அவுஸ்திரேலிய அரசாங்கம் முடிவு செய்து உள்ளது.

காலம் காலமாக கங்காரு இனங்கள் சித்திரவதை செய்யப்பட்டு, பிடிக்கப்பட்டு வெளி நாடுகளுக்கு வியாபார நிமித்தம் ஏற்றுமதியாகின. அதனால் அவற்றின் இறப்பு விகிதமும் அதிகரித்திருந்தது

தற்பொழுது மிருகவதைச் சட்டம் திருத்தப்பட்டு, கங்காரு ஏற்றுமதிக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதால், கங்காரு இனங்கள் அழிவிலிருந்து பாதுகாக்க வழி வகை செய்யப்பட்டிருக்கிறது. (உ-ஒ)

வடக்கின் மூலவளமான மண்ணைப் பேணுதல் அவசியம்

அறிஞர்கள் பலரும் வலியுறுத்துகின்றனர்

யாழ்ப்பாணம், ஜூன் 23

தமிழ் மக்கள் தமது பிரதேச மண்வளத்தைப் பேணிக்காத்தல் வேண்டும். மண் வளத்தைப் பேணினால் மட்டுமே ஏனைய வளங்கள் பெருகும். மண் வளத்தைப் பேணிப்பாதுகாக்கத் தவறிய சமுதாயங்களின் நாகரிகம் அழிந்து ஒழிந்து போனமை வரலாறு.

ஆய்வு நிறுவனத்தினால் யாழ் பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் ஒழுங்கு செய்யப்பட்ட இருநாட் கருத்தரங்கில் உரையாற்றிய கிளிநொச்சி மாவட்ட விவசாய ஆராய்ச்சி அலுவலர் திரு. வீ. துருவசங்கரி இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

யாழ் பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி இ மதனசுந்தரன் தலைமைவகித்தார். திரு துருவசங்கரி தொடர்ந்து பேசியதாவது;

மண் வளத்தைப் பேணத்தவறியமையால், சிந்துவெளி நாகரிகம் அழிந்தது மண்ணரிப்பினாலே ரோமநாகரிகம் அழிந்துபோனது. அவுஸ்திரேலியாவில் இதன் காரணமாக 150 உயிரின வகைகள் அழிந்து போயின, இவை நமக்குப் படிப்பினையாக அமையவேண்டும்.

மண்ணுக்கும் உயிருண்டு. சுவாசிக்கும். பிள்ளையைப்போல் பேணி எமது பூட்டன் பிள்ளைகளுக்கு மட்டுமல்லாது பல சந்ததியினருக்குப் பாதுகாத்து வைப்பது அவசியம்.

யாழ் குடாநாட்டிலுள்ள மண்வகைகள் மிக்கவை. [illegible] புவியியற் துறைத் தலையில் அமைவதில்லை. ரஷ்யா போன்ற பிற நாடுகளில் பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் தான் மண்வகைகள் மாறுவதுண்டு

ஆனால் 21 மைல் நீளமான குடாநாட்டில் அடுத்தடுத்து மண்வகைகள் மாறிறமடைகின்றன.

1920ஆம் ஆண்டில் ரஷ்யாவில் ஒரு பெரும் நதியைத் திசைதிருப்பி ஒரு சமுத்திரத்தைச் செயற்கையாக அமைத்தனர். அதைச்சூழப் பச்சைத் தாவரங்கள் உருவாகின. பச்சைத் தீவு என்று பெயரிட்டனர். ஆனால் ஒரு காலகட்டத்தில் அவை காய்ந்து போயின. பின்னர் மண் வளம் பாதிப்பைக் கண்டு பிடித்து, மண்ணை மீட்டெடுத்தனர். இவ்வாறு மண்வளம் அவசியமாகிறது.

ஒரு கட்டத்தில் செல்வம் கொழித்த முத்தையன்கட்டுத் திட்டம் இன்று தோல்வி கண்டமைக்கு மண்வளம் பேணப்படாமை முக்கிய காரணி ஆகும். நிலநீர் சரிவியலாளர் திரு தருணசேகரம் பின்வருமாறு குறிப்பிட்டார்:-

குடியேற்றத் திட்டங்களை அமைக்கும்போது நீரியல்பற்றிய சிந்தனைத் தெளிவினறிச் செயற்படுகிறார்கள். ஆண்டு முழுவதும் விவசாயத்துக்குப் போதிய நீரில்லாத பிரதேசங்களில் குடியேற்றம் அமையும்போது வரண்ட பருவத்தில் [illegible] குடியேறுகிறார்கள் இதனால் [illegible] முழுமையாக [illegible] ஏற்படுகிறது.

வர் திரு. எஸ். பாலச்சந்திரன் பின்வருமாறு குறிப்பிட்டார்;-

நல்ல திட்டமிடல் மூலமும், பொருத்தமான விவசாய தொழில் நுட்பம் மூலமும் இஸ்ரவேல் நாட்டில் கடல்நீர் நன்னீராகி உள்ளது ஜப்பானில் மழைபொழியச் செய்ய இத்தொழில் நுட்பம் பயன்படுகிறது. எனவே நாமும் இத்தகைய தொழில் நுட்பங்களை உருவாக்குதல் அவசியம்.'

பேராசிரியர் தெய்வேந்திரராசா பின்வருமாறு கருத்துரை வழங்கினார்:-

"எமது பிரதேச மண்ணியல், நீரியல் நிலவியல் கோட்பாடுகளை வகுத்து அதன் அடிப்படையில் எம்மக்களின் விவசாயச் செயற்பாடுகளைத் திட்டமிட்டு அமுல் செய்வது அவசியம்.'

திரு ஜோர்ஜ் பிள்ளை நாயகம் உட்பட பலரும் கருத்துரை வழங்கினார்கள். திரு எஸ். நிபுலகலா நன்றியுரை கூறினார். (உ-9)

நிவாரண உதவி

யாழ்ப்பாணம், ஜூன் 23

கடந்த 10 ஆம் திகதி மண்டைதீவுக் கடலில் படுகொலை செய்யப்பட்ட 31 குருநகர் மீனவர்களுக்கும் "குடும்ப நிவாரண நிதி" வழங்க குருநகர் வடக்கு ஊர்ஒழுங்கு அபிவிருத்திச் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது

இதற்காக பொது மக்களிடமும் இருந்து நிதி உதவி கோரப் பட்டுள்ளது. இந்த நிவாரண நிதிக்கு இதுவரை ரூபா 53,105 கிடைக்கப் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது (இ-10)

உலகியல்

குறள்:

அறஞ்சொல்லும் நெஞ்சத் தான் அன்மை
புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும்.

பொருள்:

அறத்தை நல்லதென்று போற்றும் நெஞ்சம் இல்லாத தன்மை, ஒருவன் மற்றவனைப் பற்றிப் புறங்கூறுகின்ற சிறுமையால் காணப்படும்

தேசியக் குடியேற்றக் கொள்கைக்கு இணங்குவது தற்கொலைக்குச் சமம்

ஜனாதிபதி அவர்கள் இனப்பிரச்சினை தீர்வுக்கு தாம் தெரிவித்த யோசனைகளுக்கான விளக்கங்களை அனுப்பி விட்டுஅவற்றை போராளிகளுக்கு தாம் அறிவிக்கும்வரை தெரியப்படுத்த வேண்டாம் என்று சொன்னார்.

அதன் பின்னர் ஜெனிடிமெல் அவர்களை பாரிஸில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மாநாட்டிற்கு அனுப்பி வைத்திருப்பதிலிருந்தே அந்த மூடுமந்திரம் என்ன என்பது தெரிந்திருக்கும்.

சென்ற வருடம் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிலேயே இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வுகாணும்படி எச்சரித்து அனுப்பியிருந்தனர். இவ்வாறான நிலையில் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணையும் போராளிகள் கைகளுக்குக் கிடைத்து அதில் எதுவும் இல்லை என்று போராளிகள் அறிவித்து விடுவார்களாகில் அது நிதி வழங்கும் நாடுகளை பின்வாங்க வைத்துவிடும்

அதனால் தான் ஏதோ தீர்வுஇதோ வந்து விட்டதாக காண்பித்து கிடைக்கும் அந்த நிதி உதவியை வைத்து அடுத்த மாநாட்டிற்கு முன் இராணுவத் தீர்வைக் கண்டு விடலாம் என்று எதிர்பார்க்கிறது இலங்கை அரசு

தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாகாண சபை யோசனையாக இருந்தாலும் சரி, பார்த்தசாரதியின்- சி'இணைப்பு அல்லது தொண்டமானின் பிரேரணை எதுவாக இருந்தாலும் அதிலுள்ள தேசிய குடியேற்றக் கொள்கையானது தமிழினத்திற்கு மிகவும் பாதகமானது.

தேசிய குடியேற்றம் என படுவது மகாவலி, மதுறு ஓயா போன்ற பாரிய குடியேற்றத் திட்டங்கள் தாழ நிழக்கு மாகாணத்தின் காற்பங்கு) சிங்களமயமாக்கப்பட்டுவிடும். அம்பாறை குடியேற்றத் திட்டத்தின் பின் தொடர்ச்சியான இனக்கலவரங்களின் பின் எவ்வாறு அங்கிருந்து பூர்வீகக் குடிகளான தமிழர்கள் வெளியேற்றப் பட்டார்களோ அதே போல இப்பிரதேசமும் தனி சிங்களமாக காலப் போக்கில் மாறிவிடும். ஆகவே இக்குடியேற்றமானது தமிழ்ப் பிரதேசத்தை ஆக்கிரமிக்கப் போவது மாத்திரமல்ல தமிழரின் தாயகத்தை எங்கோ தூரதிதேயுள்ள இருவேறு துண்டுகளாக்கி விடும்.

இலங்கை வந்துசென்ற

மானிப்பாய் சிவம்

என்பனவற்றைக் உள்ளடக்கியதாகும் அவ்வாறான குடியேற்றங்கள் நடக்கும் பொழுது இலங்கையின் முழு இனக்கிதாசாரப்படி பேசுகாணிகள் பகிர்ந்தளிக்கப்படும்

அவ்வாறு நடைபெறும் பட்சத்தில் இன்னும் 5 வருடங்களில் மதுறு ஓயா திட்டத்தில் வருகின்ற பிரதேசங்களாகிய திருகோணமலையிலிருந்து வவுனியாவரையான பிரதேசம் (ஏறத்தாழ சிதம்பரம் குழுவினரும், ஏன் பார்த்தசாரதியும் கூட தேசிய குடியேற்றக் கொள்கைக்கு ஒரளவு ஒத்துப் போனார்கள். ஆனால் அவர்கள் மதுறு ஓயாவின் பாரிய அளவையும் அதனால் ஏற்படக்கூடிய பெரும் விளைவையும்- கபட அரசாங்கமானது மேலும் எத்தனை மதுறு ஓயாக்களை உருவாக்கும் என்பதையும் அறிந்திலர்.

உகாரணமாக வட

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டச்சு (ஆங்கிலம், தமிழ்)
றேனியோ வேலைகட்கு
TEENS COPY
514/14, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

உதயன்

23 - 06 - 1986 திங்கட்கிழமை

சகல விதமான
தட்டச்சு மெஷின்கள், றேனியோ மெஷின்கள், தையல் மெஷின்கள், Adding Machines, N.C.R Machines, சுவர் மணி கூடுகள், மேசை மணிக்கூடுகள், Calculators
திருத்த
TEENS COPY
514/14, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

விசித்திரம்

என்னை முரளியார் வழமையாய் ஞாயிற்றுக் கிழமையில் கட்டாயம் உம்மைச் சந்திக்கிறனுன். நேற்று முடியவில்லை மன்னிக்க வேண்டுகிறேன்!

எப்பிடி, எங்கடை அச்சாணியார் திடுதிப்பென அமெரிக்காவுக்குப் பாய்ஞ்சிட்டார் மின்னல், முழங்காமல் பெய்தமழைமாதிரிதிடீர் எண்டு பறந்துவிட்டார் பாத்தியே.

அமெரிக்காவில் உள்ள இலங்கையர் சங்கக்கிளை பேரிறத்துக்குத் தான் போறதாகச் சொல்லிக்கொண்டிருக்கும், ஒண்டுக்குப்போல பல வேலையளைப் பார்த்துக்கொண்டு வரலாம் தானே!

இஞ்சை புதன்கிழமை அது தான் நாளையின் படைக்கு சர்வகட்சி மாநாடு நடக்கப்போகுது அவர் சளிக்கிறன மயே அமெரிக்கா பறந்து விட்டார். பாத்தியே கெட்டித்தனத்தை!

இனப்பிரச்சினை - பாதுகாப்புவிஷயங்களிலைதான் பெரியவருக்கு அடுத்த பெரியவர் மாதிரி இருக்கிறவர் உவர் அச்சாணியார் தான். எப்பிடியோ பிரதம மந்திரி எண்டு இருக்கிறவரையும் ஒருபக்கத்துக்கு ஒதுக்கிவிட்டு, தான் தான் முந்திரிக்கொட்டை மாதிரி எல்லா விஷயத்திலும் முந்திக்கொள்ளுறவர்.

ஆனால் முக்கிய விஷயங்கள் நடக்கையிக்கை வலு நைசாக வெளிநாடு எண்டு நழுவிவிடுவார்.

போன தடவையும் நெம்பரம் குழு கொழும்பிலை வந்து பேச்சு நடத்திக்கொண்டு இருக்கையிக்கை லண்டனுக்கு எண்டு சொல்லி நெதுவா ஒட்டம் பிடிச்சிட்டார் லண்டனுக்கு மட்டுமில்லை, அதுக்கு ஏனை இன்றேலுக்கும் போனதாக அப்ப பெரிசாக் கதை அடிபட்டிச்சு.

இப்ப சர்வகட்சி மாநாடு நடக்கிற நேரத்திலை அமெரிக்காவுக்குப் பறந்திட்டார்.

இனம் இனத்தைச் சேரும் எண்டு தெரியாமலே சொன்னவங்கள். தென்னிலங்கையர் பார்லையிலை இஸ்ரவேல், அமெரிக்கா எல்லாம் கலோதரங்கள் மாதிரி. அவை இரண்டு பேரின்டை உதவியிலும்தானே அச்சாணியார் தன்னர்த்தர் வேலை பாத்து வாழுர்.

மாநாடு, கூட்டம் பேச்சு எண்டு ஏதாவது நடந்தால், சமாதானமாய் போவதற்கு தாங்கள் ஆயத்தப்படுத்துவம் எண்டு சகோதரங்கள் சமிசப்படுவினமோ எண்ட பயம் அதுக்கு இடம் குடுக்காமல் விஷயத்தை— உண்மையை விளங்கப்படுத்துறத்துக்காகத்தான் அங்கினை ஓடிப்போகுறோ ஆருக்குத் தெரியுமப்பா!

நீங்கள் ஒண்டும் பேசிக்க வேண்டாம் நாங்கள் காலத்தைக் கடத்திறதுக்கும், வெளி உலகத்தை ஏய்க்காட்டுவதற்குமாகத் தான் உந்தப் பேச்சு, மாநாடு எண்டு நாடகம் போடுகிறனுங்கள். நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்கத் தேவையில்லை. உங்கடை உதவியளை நம்பித்தான் இராணுவ வழி செல்கிறோம். - இப்பிடி அந்தச் சகோதரங்களுக்கு தங்கடை குடும்ப இரகசியத்தை சேருக்கு நேர் சொல்லத்தான் அங்கினை போகுராய் இருக்க வேணும்.

* * *

உலகயின்ரை சர்வகட்சி மாநாட்டிலை கூட்டணி கலந்து கொள்ளாது; சிறிலங்கா கலந்து கொள்ளாது பிலிப்குணவர்த்தனு மகள் தினேஷின் கட்சி கலந்து கொள்ளாது பிறகு என்னண்டு உது சர்வகட்சி மாநாடு சிலகட்சி மாநாடு எண்டு தான் சொல்ல வேணும்.

வந்தச் சி. க மாநாட்டிலை எப்பிடியாவது கலந்து கொள்ளவேணும் எண்டு திரும்பவும் சிறிமாவைத் தாஜா பண்ணுற வேலையள் நடந்து வருகுதாம்.

ஆசாபெரியவர் தனிப்பட்ட முறையிலை அம்மையாருக்கு ஒரு "பீலிங்" கடிதம் எழுதினுர் எண்டும், அதுக்கு ப்பிறகு தான் சி. க. மாநாடு கூடுவதுக்கு முன்னம், தான் ஒரு தூதுக்குழுவை அனுப்புறதாக அம்மையார் சொல்லியிருப்பதாகவும் காதிலை விழுந்தது.

அம்மையாரைப் பற்றிச் சொல்லுக்குள்ளை, மருமேன் விஜேலைப் பற்றியும் சொல்ல வேணும் போலை இருக்கு. எனக்கு வேலை இருக்கு. நாளைக்குச் சொல்லுறேன் சரியே!

சிங்கள, தமிழ் போராளிகள் இடையே இணைப்பு

பாதுகாப்பு அமைச்சு கண்டுபிடித்துள்ளதாம்

கொழும்பு, ஜூன் 23

சிங்களப் போராளிகளுக்கும் தமிழ்ப் போராளிகளுக்கும் இடையே இணைப்பு உருவாகி வருகின்றதாம்.

இப்படிப் பாதுகாப்பு அமைச்சு, ஆயுதப்படையினர், பொலீஸார் ஆகியோருக்கு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக இரண்டு சிங்களக் குழுக்கள் அடையாளங் காணப்பட்டுள்ளன.

ஒன்று, சமூக மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியுடன் தொடர்பு வைத்துள்ளது.

மற்றது தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்துடன் உறவு கொண்டுள்ளது.

தென் இந்தியாவில் உள்ள முகாம்களில் சிங்களப் போராளிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

ஆயுதம் சேகரிப்பது, நிதி சேகரிக்கக் கொள்ளை கண்டு நடத்துவது போன்ற நடவடிக்கைகளில் சிங்களக் குழுக்கள் ஈடுபட்டுள்ளன.

ஹபரணையில் அவர்களின் பயிற்சி முகாம் ஒன்று அண்மையில் முற்றுகையிடப்பட்டது.

இப்படிப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (உ-எ)

சஞ்சிகையில் இருந்த படத்திற்காக ஹோட்டல் ஊழியர் கைது

கொழும்பு, ஜூன் 23

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் படத்தை அட்டைப் படமாகக் கொண்ட இந்திய சஞ்சிகையை விற்பனைக்கு வைத்திருந்த கொழும்பு ஹோட்டல் ஒன்றின் ஊழியர்கள் அனைவரும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்றுக் காலை ரோந்து வந்த பொலீஸார் மருதானையில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் இச்சஞ்சிகை தொங்குவதைக் கண்டனராம். உடனே கடைக்குள் புகுந்து சஞ்சிகையைக் கைப்பற்றியதுடன், அங்கு வேலை செய்த 25 ஊழியர்களையும் விசாரணைக்கு அழைத்துச் சென்றனர்.

விசாரணை நடைபெறுகின்றது.

மேற்படி பத்திரிகை இலங்கையில் செய்தி இதழாகப் பதிவு செய்யப்பட்ட இந்திய சஞ்சிகை என்று கூறப்படுகிறது. (உ-எ-1)

முஸ்லிம் நபர் பலி

மட்டக்களப்பு, ஜூன் 23

முறைமுடி நாளை நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு முஸ்லிம் நபர் உயிரிழந்தார்.

இன்னொருவருக்கு காயம் ஏற்பட்டது.

கடந்த வியாழன் அக்கரைப்பற்றில் 4 ஆம் குறிச்சியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இறந்தவரின் பெயர் இஸ்மாயில் வயது 24, காயமடைந்தவரின் பெயர் அன்ஸார், வயது 21 அவர் கண்டி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார் (உ-ா.21)

வயாவிளா..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டது.

பிற்பகல் 2 30 மணி வரை போராளிகள் நடத்திய கடும் தாக்குதலையடுத்து சிப்பாய்கள் வந்த வழியே முகாமுக்குத் திரும்பினர்.

இந்த மோதலில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த போராளியான வேலுப்பிள்ளை முருகதாஸ் வீரமரணமடைந்தார்.

காயமடைந்த புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த மற்றொரு போராளியான ஷன் (பைப்பன்) என்பவர் முதலுதவி சிகிச்சை வழங்கப்பட்டதையடுத்து வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று மாலையில் வயாவிளான் சந்தியில் போராளிகள் நவீன ஆயுதங்களுடன் வீதியில் நின்று காவல்புரிவதைக் காணக் கூடியதாகவிருந்தது (உ-119)

தேசிய

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மத்திய மாகாணத்திற்கு வந்து விட்டமகாவலியை வவுனியா மாவட்டத்திற்குக் கொண்டு வந்து இரணைமடுவில் கலக்கும் கனகராயன் ஆறு, மற்றும் சிற்றாறுகளுடன் இணைப்பதன் மூலம் வடமாகாணம் முழுவதையுமே தேசிய குடியேற்றத் திட்டத்தின் கீழ் கொண்டு வரமுடியும்.

இனப் பிரச்சனைக்குத் தீர்வாக முஸ்லிம்கள் சமர்ப்பித்த யோசனையில் கூட அவர்கள் 1948 ஆம் ஆண்டு இன விகிதாசாரப்படியே குடியேற்றங்கள் நடைபெற வேண்டுமென்றே கேட்டிருந்தார்கள். இவ்வாறான நிலையில் தேசிய குடியேற்றக் கொள்கைக்கு விட்டுக் கொடுப்போமாகில் தற்கொலை செய்து கொண்டதற்கு ஒப்பாவோம்

வலங்கை . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சமாளிக்க வேண்டிய இக்கட்டான நிலையில் இந்தியா உள்ளது.

இப் பிரச்சினை இந்தியாவில் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது

இப்படி அமைச்சர் சில்சங்கர் சொன்னார். (உ-ா)

கந்தளாயில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வில் மோட்டார் சைக்கிளில் கட்டப்பட்டிருந்த குண்டு பயங்கர சத்தத்துடன் வெடித்தது. மோட்டார் சைக்கிள் தூக்கி எறியப்பட்டு சிதறியது.

ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். 20 பேர் வரையில் காயமடைந்தனர் படுகாயங்களுக்காளான ஆறுபேர் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு ஹெலிகொப்டர் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

அவர்களில் ஒருவர் பின்னர் ஆஸ்பத்திரியில் மரணமானார்

இச்சம்பவத்தைத் தொடர்ந்து கந்தளாய் பட்டினப் பகுதி ஆயுதப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு பலத்த சோதனையிடப்பட்டது. (உ-ா-150)

பல்கலை மாணவர் நிதி சேகரிப்பு

அண்மையில் கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்ற சிப்பாய்களின் தாக்குதல்களின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமளிப்பதற்காக பல்கலைக் கழக மாணவர்கள் நிதி சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இன்று திங்கட்கிழமை முதல் புதன்கிழமை வரை பொதுமக்களிடம் நிதி சேகரிப்பது என மாணவர் அவை தீர்மானித்திருக்கிறது

இதன் பொருட்டு மக்களிடம் மாணவர் அவைப் பற்றுச் சீட்டுடன் வரும் பல்கலைக் கழக மாணவர்களுக்கு ஆதரவு வழங்குமாறு மாணவர் அவை வேண்டி கோரி விடுத்துள்ளது.

நினைவஞ்சலி

ஆண்டுப் பிரசுரம்

இவ் வருடம் ஏப்ரல் மாதம் வட்டுக்கோட்டையில் உறக்கத்தில் கூட்டுக் கொலை செய்யப்பட்ட ஊர், பெயர், முகங்கள் தெரியாத ஈழதேச விடுதலைக்காக மரணித்தவர்களின் நினைவாக 45ஆம் நாள் நினைவஞ்சலித் துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது

விடுதலைப் போராளிகளுக்கு எதிராக திருப்பப்பட்ட துப்பாக்கிகள் போராளிகளைத் தொடர்ந்து அழிக்குமா? அன்றி எதிரிக்கு எதிராகத் திருப்பப்படுமா?

இப்படி அந்தத் துண்டுப்பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது

விளையாட்டரங்கு

உலக கிண்ணம்

பலம் மிக்க பிரேஸில் கால் இறுதியில் அவுட்!

மெக்ஸிக்கோவும் தோல்வி

மெக்ஸிக்கோ, ஜூன் 23

உலக கிண்ணப் போட்டிகளின் கால் இறுதியாட்டத்தில் பலம்வாய்ந்த அணியாகக் கருதப்பட்ட பிரேஸில் தோல்வியடைந்தது

உலகக் கிண்ணப் போட்டிகளை சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கும் மெக்ஸிக்கோ நாட்டின் அனுரியும் கால் இறுதியாட்டத்தில் தோல்வியுற்றது.

ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிந்த நிலையில் இறுதியாக நடைபெற்ற 'பனல்டி' உதைகளில் இரண்டு அணிகளும் கற்றுப்போட்டியில் முன்னேறும் சந்தர்ப்பங்களை கோட்டைவிட்டன.

பிரேஸில் அணியை பிரான்ஸ் 'அவுட்' ஆக்கியது.

மெக்ஸிக்கோ அணி மேற்கு ஜேர்மனியிடம் தோல்வியுற்றது.

பிரேஸில் பிரான்ஸ் அணிகளுக்கிடையிலான முதலாவது ஆட்டம் ஆரம்பம் முதல் இறுதிவரை விறுவிறுப்பாக நடைபெற்றது.

பிரேஸில் கோல் அடிக்கக்கிடைத்த பல சந்தர்ப்பங்களை — பிரேஸில் முன்னணி வீரர்களின் தாக்குதல்களை — பிரான்ஸ் கோல்காப்பு வீரர் தவிடு பொடியாக்கினர்

குறிப்பிட்ட ஆட்டம் முடிவில் இரு அணிகளினாலும் தலா ஒரு கோலே போட முடிந்தது.

பின்னர் வெற்றி தோல்வி நிர்ணயிப்பதற்காக பனல்டி உதைகள் வழங்கப்பட்டன

பிரேஸில் அணியின் சில பனல்டி உதைகளை பிரான்ஸ் கோல்காப்பு வீரர் அபாரமாகத் தடுத்து தன்னு அணிக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தார்.

இந்த ஆட்டத்தில் பிரான்ஸ் 4 - 3 என்ற கோல் அடிப்படையில் வென்றது.

மேற்கு ஜேர்மன், மெக்ஸிக்கோ ஆட்டத்தில் இரு அணிகளும் கோல் எதனையும் பெறத் தவறின பனல்டி உதைகளின் முடிவில் மேற்கு ஜேர்மன் 4 - 1 என்ற அடிப்படையில் வென்றது.

இன்று நடைபெறவிருந்த மற்றைய இரண்டு கால் இறுதிப் போட்டிகளில் ஸ்பெயின் அணி பெல்ஜிய அணியுடனும், இங்கிலாந்து அணி ஆர்ஜென்டீனு அணியுடனும் மோதவிருந்தன.

1982 ஆம் ஆண்டில் நடைபெற்ற போக்லாந்து யுத்தத்திற்குப் பிறகு இங்கிலாந்து, ஆர்ஜென்டீனு நாட்டு அணிகள் விளையாட்டுப் போட்டியொன்றில் சந்திப்பது இதுவே முதல் தடவையாகும். (உ)

அம்பாறை தமிழருக்கு வந்த கடிதங்கள் பொலீஸார் விசாரணை

கொழும்பு, ஜூன் 26

அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழர்களுக்கு அனுப்பப்பட்டதாகக் கூறப்படும் கடிதங்கள் குறித்து இரகசியப் பொலீஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

தபால் மூலம் அனுப்பப்பட்ட இக்கடிதங்களில் ஜூன் 20 முதல் ஜூன் 25 வரை தமிழரை அம்பாறை மாவட்டத்தில் ஒதுங்கியிருக்கும்படி கூறப்பட்டிருந்ததாம்.

இக்கடிதங்கள் எங்கிருந்து அனுப்பப்பட்டது என்பது பற்றியே பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு இருப்பதாகத் தெரியவருகின்றது. (உ-எ-2)

950 தொன். . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தின் அதிகாரிகளும் எடுத்த முயற்சிகளின் பலனுகவே இந்தச் சீனி முடைகள் தருவிக்கப்பட்டிருக்கின்றன.

சீனியை இறக்குவது தொடர்பான வேலைகள் நிர்வாகச் சிக்கல் ஒன்று காரணமாக சனிக்கிழமையன்று நடைபெறவில்லை.

அன்றையதினம் சீனியை இறக்கி விநியோக வேலைகளை மேற்கொள்வதற்காக துறைமுகத்திற்கு வந்த பலலொறிகள் வேலையில்லாமல் திரும்பிச் சென்றன.

எனினும் பின்னர் அரச அதிபருடன் நேரடியாக தொடர்பு கொள்ளப்பட்டதையடுத்து சீனி இறக்கும் வேலைகள் ஞாயிற்றுக்கிழமையன்று ஆரம்பமாகின. (உ-68)

மீண்டும் சிப்பாய்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 23

தோல்கட்டி ஆச்சிரமத்தினுள் நேற்றும் சிப்பாய்கள் புகுந்தனர்.

நேற்றுக்காலை ஏழு மணிக்கு உள்ளே புகுந்த சிப்பாய்கள் அங்கே இருந்த துறவிகளை துருவித் துருவி விசாரித்தார்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை சுட்டுக் கொல்லப்பட்ட வணக்கத்துக்குரியசகோதரர் வெனிஸ்லாஸ் குறித்து அவர்கள் விசாரித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

மன்னுரில் இளைஞர் பலி

யாழ்ப்பாணம், ஜூன் 23

மன்னுரில் ரோந்து சென்ற சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார்

இச்சம்பவம் புதன்கிழமை நடைபெற்றது.

மன்னுர் இராணுவ முகாமில் இருந்து தேடுதல் வேட்டைக்குப் புறப்பட்ட சிப்பாய்கள் வீதியோரங்களில் சென்று கொண்டிருந்த பொதுமக்கள் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்று தெரியவருகிறது. (இ-10)

தோட்டத்தில் நீர் பாய்ச்சிய 2 தமிழர் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு, ஜூன் 23

வெற்றிலைத் தோட்டத்துக்கு நீர் பாய்ச்சிக் கொண்டு இருந்த இரண்டு நடுத்தர வயதுத் தமிழர்கள் சிப்பாய்களின் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்தனர்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பில், களுதாவளை என்னுமிடத்தில் இடம் பெற்றது

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது;

தனியார் பஸ்களில் சிப்பாய்கள் மட்டக்களப்பு — களுதாவளை வீதியில் ரோந்து வந்து கொண்டிருந்தனர்.

களுதாவளைக்கு அருகில் வைத்து ஓர் இளைஞன் பஸ்ஸை நிறுத்தச் சைகை காட்டினுன்

பஸ்ஸில் உள்ளே சிப்பாய்களைக் கண்டவுடன் இளைஞன் ஓட்டம் பிடித்துத் தப்பினுன்.

ஆனுல் சிப்பாய்கள் பஸ்ஸை அரித இடத்தில் நிறுத்தி இறங்கி தேடுதலில் ஈடுபடத் தொடங்கினர். அச்சமயம் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் வெற்றிலைத் தோட்டம் ஒன்றில் நீர்பாய்ச்சிக் கொண்டு நின்ற இரண்டு தமிழர்கள் சுடுபட்டு மரணமானுர்கள்

அவர்களின் சடலங்களை பஸ்ஸில் ஏற்றிக் கொண்டு சிப்பாய்கள் சென்றனர் (உ-எ-21)

தமது வீட்டிலுள்ள பொருள்களை எடுக்க சென்றவர்கள் கைது!

வயாவிளானில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

வயாவிளான் மகா வித்தியாலயத்திற்கு அருகில் இருந்த தமது வீடுகளை விட்டு வெளியேறி அகதிகளாக தஞ்சம் புகுந்திருந்த மூவர் மீண்டும் தமது வீட்டில் உள்ள பொருள்களை எடுக்கச் சென்றபோது சிப்பாய்களினுல் கைது செய்யப்பட்டனர்.

சி சிவகரன் (வயது30) சி சிவநேசன் (வயது26), இ கிருஷ்ணகுமார் (வயது 14) ஆகிய மூவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்களுன் சென்ற பெண்கள் விடுவிக்கப்பட்டனர்.

"நீங்கள் பொருள்களை எடுத்துச் செல்லுங்கள் நாங்கள் இவர்களை எடுத்துச் கைகிறோம் விசாரணையின் பின் விடுவிக்கிறோம் - இப்படி சிப்பாய்கள் அந்தப் பெண்களிடம் கூறினுர்களாம். (உ-5

உள்நாட்டு வெளிநாட்டு ரெலிபோன் அழைப்புக்கள்

முக்கிய அறிவித்தல்

யாழ் — கொழும்பு ரெலிபோன் தொடர்பு அமைப்பு பழுதடைந்து இருக்கின்ற இந்நாட்களில், உள்நாட்டு வெளிநாட்டு ரெலிபோன் அழைப்புக்களைச் சிற்சில கிராமங்கள் மத்தியில் ஓரிரு நிமிடத்திற்குள் இப்பொழுது பெற்றுத் தந்து கொண்டிருக்கிறோம்.

-- ரெலிகுளோப்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மணிபாரதி அச்சகத்தில் அச்சிடப்பட்டு, [illegible] வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 23—6—1986
Printed and Published by Udayan Publications (Private) Ltd 16, Second Lane, Power House Road JAFFNA
Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka, Under Number [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org